INTERNATIONAL TRUTH AND JUSTICE PROJECT

W ITJPSL.COM
E ITJPSL@GMAIL.COM

EXECUTIVE DIRECTOR:
YASMIN SOOKA

**ஊடக அறிக்கை: தனது இராணுவத்தின் தலைவராக குற்றஞ்சுமத்தப்பட்ட போர்க் குற்றவாளியை பதவிஉயர்வு கொடுத்து தனது மக்களுக்கு துரோகம் செய்யும் இலங்கை.**

**19 ஆகஸ்ட் 2019**

**ஜொகானஸ்பேர்க்:** பெயர் போன போர்க்குற்றவாளியான மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவை இராணுவத்தளபதியாக நியமிக்கும் இலங்கை ஜனாதிபதியின் முடிவானது சவேந்திர சில்வாவிற்கு எதிரான போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் பற்றிய குற்றச்சாட்டுக்களை கருத்திற்கொள்ளும் போது அது நாட்டைப் பெரிதும் பாதிப்பதுடன் எந்தவொரு நல்லிணக்க நடவடிக்கைக்குமான முடிவு என்பதையும் குறிக்கின்றது.

இந்த வருடம் ஜனவரியில் போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களுக்கு எதிராக குற்றஞ்சுமத்துவதற்கு போதுமான ஆதாரங்களைக் காட்டும் 137 பக்கங்களைக் கொண்ட ஒரு ஆவணக்கோவையை சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்திட்டம் வெளியிட்டிருந்தது. முக்கிய தேர்தல்கள் நடைபெறுவதற்கு சில மாதங்களே உள்ளநிலையில் அவர் இராணுவத்தின் அதியுயர் பதவிக்கு தற்போது பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

*"சர்வதேச சட்டத்தை மீறுவதற்கான தனது விருப்பத்தை வெளிக்காட்டியிருந்த ஒரு மனிதர் இவர்'' என ITJP இன் நிறைவேற்றுப் பணிப்பானர் ஜஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார், '' இவரது பதவி உயர்வானது நாடுமுழுவதும் அச்சத்தினை ஏற்படுத்தும் குறிப்பாக பொதுமக்கள் இருந்த இடங்கள் மீதான தாக்குதல்கள் சில்வா தலைமையில் இடம்பெற்றதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ள நிலையில் 2009 இல் பாரிய இழப்புகளைச் சந்தித்த ஆயிரக்கணக்காக தமிழர்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தும்''*

எண்பதுகளில் ஜனதா விமுக்தி பெரமுன (ஜேவிபி) அல்லது மக்கள் விடுதலை முன்னணியின் போராட்டத்தை நசுக்குவதில் அவரின் பங்கிற்காக சவேந்திர சில்வா ஒருபோதுமே பொறுப்புக்கூறலுக்கு உட்பட்டிருக்கவில்லை, இதன்போது படுகொலைகள் , வலிந்து காணமற்போதல்கள் , சித்திரவதை மற்றும் பாலியல் வன்முறை மற்றும் ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டமை பற்றிய நம்பத்தகுந்த குற்றச்சாட்டுக்கள் இருந்தன. வன்செயல்களில் சில சில்வா இருந்த மாத்தளையில் இடம்பெற்றன அங்கு அவர் முதலாவது கஜபாகு படையணியின் கட்டளையதிகாரியாக இருந்த கோத்தபாய ராஜபக்சவின் கீழ் பணியாற்றி வந்தார்.

''அதிக இரத்தம் சிந்தலுக்குப் பின்னர் வன்முறைகள் மீண்டும் மீண்டும் இடம்பெறுவதைத் தடுக்கும் பொருட்டு இலங்கையர்கள் தமது தலைவர்களை பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்துவது

அவசியமாகும். எவ்வாறாயினும் சில்வாவினுடைய பதவிஉயர்வானது தண்டணையிலிருந்து முற்றிலும் பாதுகாப்பு வழங்குவது பற்றிய செய்தியை தெரிவிக்கின்றது'' என சூக்கா மேலும் தெரிவித்தார்.

சில்வாவினுடைய நியமனமானது இலங்கை இராணுவத்திற்கான அமெரிக்க உதவியையும் கேள்விக்குரியதாக்கியுள்ளது அதாவது லேகி சட்டங்களுக்கு உட்பட்டதாக தண்டனையிலிருந்து பாதுகாக்கப்பட்டு மனித உரிமைகளை மீறும் வெளிநாட்டுப் பாதுகாப்புபடை அணிகளுக்கு அமெரிக்கா இராணுவ உதவிகள் வழங்புவதை இந்தச் சட்டம் தடுக்கின்றது. இந்த நியமனம் ஐ.நா சமாதானப் படைகளில் இலங்கையினை ஈடுபடுத்துவது அண்மையில் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் அதன்மீதும் தாக்கத்தை ஏற்படுத்தும். சமாதான காப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவது 2018 இல் நிறுத்தி வைக்கப்பட்ட அதேவேளையில் 2008-9 இல் போர்க் குற்றஞ்கள் இடம்பெற்றதாக கூறப்படும் பிரதேசங்களில் சண்டையிட்ட அணிகளைச் சேர்ந்த ( சில்வாவின் 58 ஆவது படைப்பிரிவு போன்ற) இராணுவத்தினர் தவிர்க்கப்படுவதை உறுதிசெய்யும் பொருட்டு மேலும் இறுக்கமான வடிவட்டும் நடவடிக்கைகள் இடம்பெற்றிருந்தன.

*''எல்லா பின்விளைவுகளும் விபரமாக கூறப்பட்டு இலங்கை இந்த நடடிக்கையை மேற்கொள்வதை தடுப்பதற்காக தீவிரமான இராஜதந்திர அழுத்த நடவடிக்கைகள் இருந்துள்ளது என எண்ணுகிறேன். இவ்வாறான நடவடிக்கையை மேற்கொள்ளும் எந்த நாட்டிற்கும் அதன் நலன்களைப் பாதிப்பதாகவே அமைவதுடன் குறிப்பாக சட்ட ஆட்சிக்கு வெளிப்படையான அச்சுறுத்தலாகவும் உள்ளது'' எனவும் சூக்கா மேலும் தெரிவித்தார்.*

*" இலங்கையின் நட்புநாடுகள் தற்போது ஒரு கொள்கை நடவடிக்கையை எடுக்கும் எனவும் உத்தியோகபூர்வ கடமைக்கு கூட மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா வெளிநாடு செல்வதற்குரிய விசா வழங்கப்படாதிருப்பதை உறுதிசெய்யும் என நான் நம்புகிறேன்.''*

முற்றும்

INTERNATIONAL
TRUTH
AND JUSTICE
PROJECT